மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோமதி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>16.09.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்துக்கள் எனக்கு எந்த வகையில் பாத்தியம் என்றால் நான் கிரயம் வாங்கினேன். தாவா சொத்திற்கு தென்புறமுள்ள சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மற்றும் தாவா சொத்தின் தென்புறமுள்ள சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தாத்தாவான பழனிச்சாமி என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் அவ்வாறு தான் சொன்னார்கள் நான் தாவா சொத்துக்களை கிரயம் பெற்றபோது பழனிச்சாமி கவுண்டருக்கு தாவா சொத்துக்கள் எந்த வகையில் பாத்தியம் என்பதற்கான ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

2. 1974 ஆவணத்தின் அடிப்படையில் அவருக்கு தாவா சொத்துக்கள் பாத்திய பட்டிருந்தது மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் பழனிசாமி கவுண்டருக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால்

அதை நான் பார்க்கவில்லை. பழனிச்சாமி கவுண்டர் பெயரில் உள்ள ஆவணத்தை தான் வா.சா.ஆ.1 ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்துக்கள் விவசாய பூமியாக இருந்தது என்றால் ஆமாம். தாவா சொத்துக்களும் 1ம் பிரதிவாதியின் சொத்துக்களும் ஆதியில் பிஏபி வாய்க்கால் பாசனத்திற்கு கட்டுப்பட்ட பூமிகள் என்றால் இல்லை அதை பார்த்துவிட்டு தான் நான் கிரயம் வாங்கினேன்.

3. பழனிச்சாமி கவுண்டருக்கு பின்னிட்டு 2002 ஆம் ஆண்டு பழனிசாமி கவுண்டரின் மக்கள் அவரது சொத்துக்களை பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான் அந்த பாகப்பிரிவினை ஆவணத்தை தான் நான் வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(மேற்கொண்டு ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.16 18:24:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்